5th November 1965]

ரூ. 6,000 கொடுத்திருக்கிறார்கள். 1965-66-இல் ரூ. 3,000 கொடுத்திருக்கிறார்கள். கணக்குகள் எல்லாம் தணிக்கை செய்யப்படுகின்றன.

சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட மானியம், கடன்

* 309 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை மாநகராட்சிக்கு 1963-64-ல் வழங்கிய மானியத் தொகை எவ்வளவு, கடன் தொகை எவ்வளவு?

(இ) சென்னை மாநகராட்சியிடமிருந்து அதே ஆண்டில் பழைய பாக்கிக்காகவும் வட்டிக்காகவும் வசூலிக்கப்பட்ட தொகை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) (i) மானியம் ரூ. 45,35,677.

(ii) கடன் ரூ. 1,46,82,000.

(இ) (i) அசலுக்காக ரூ. 37,27,527.

(ii) வட்டிக்காக ரூ. 29,72,072.

Mofussil bus stand at Broadway

* 310 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state :—

(a) whether there is any proposal under consideration of the Government to take over the Broadway mofussil bus stand from the Madras City Corporation with a view to construct a new bus stand with all facilities; and

(b) if so, the details thereof?

THE HON. SRI G. BHUVARAHAN: (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன்: பிராட்வே பஸ் நிலையத்தைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டால், அதைப் பல மாடிகள் கொண்ட பஸ் நிலையமாக ஆக்கிவிடமுடியும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு சமயம் கூறியிருக்கிறார்கள். மாநகராட்சிக்குக் கடன் கொடுத்து, பல மாடிக் கட்டடத்தை அரசாங்கமே கட்டி, மாநகராட்சிக்கு ஒப்படைத்தால் மாநகராட்சிக்கு வருமானம் இருக்கும், பொதுமக்களுக்கும் வசதி இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.